பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
16 10 2025 THURSDAY 7.15 PM
ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் பன்முக உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான திட்டங்களை மத்திய அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. உலகிலேயே விரைந்து வளர்ச்சிபெற்றுவரும் பொருளாதார நாடாக இந்தியா உருவெடுத்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

3. உணவுப் பொருட்கள் அடைக்கப்பட்டுள்ள உறைகளின் மீது ORS என்று அச்சிடுவதை நீக்க வேண்டும் என்று இந்திய உணவு பாதுகாப்பு தர நிர்ணய ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

4. ஆப்கானிஸ்தான் – பாகிஸ்தான் இடையே நிலவும் சூழ்நிலையை இந்தியா கூர்ந்து கவனித்து வருவதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

5. உலக ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Tankara Gnana Dattu Talasila காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>>

வளர்ச்சியடைந்த பாரதம் என்ற இலக்கை 2047-ஆம் ஆண்டுக்குள் நிச்சயம் எட்டுவோம் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

ஆந்திரப்பிரதேச மாநிலம் கர்னூலில் 13 ஆயிரத்து 430 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடங்கிவைத்தும், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும் பேசிய அவர், 21-ஆம் நூற்றாண்டு 140 கோடி இந்திய மக்களுக்கானது என்று கூறினார்.

நாட்டில் பன்முக உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களை மத்திய அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அனைத்துப்பகுதிகளுக்கும் போக்குவரத்து கட்டமைப்பை விரிவுபடுத்துவதற்கான பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

தூய்மை எரிசக்தி மற்றும் மின் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு மத்திய அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருவதாக தெரிவித்த பிரதமர், எரிசக்தித்துறையில் இந்தியா சாதனை படைத்து வருவதாகவும் கூறினார்.

அனைத்து கிராமப்பகுதிகளிலும் மின்சார வசதி செய்துதரப்பட்டுள்ளதாக கூறிய பிரதமர், தனிநபர் மின் நுகர்வு ஆயிரத்து 400 யூனிட்டாக அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்களால் ஆந்திரபிரதேசத்தில் 8 ஆயிரம் கோடி ரூபாய் சேமிப்பதற்கான வாய்ப்புள்ளதாகவும் அவர் கூறினார்.

பண்டிகை காலங்களில் இதன் பயனை மக்கள் அதிக அளவில் பெறுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவின் ட்ரோன் மையமாக கர்னூல் உருவெடுத்து வருவதாக தெரிவித்த அவர், புதிய துறைகள் வளர்ச்சிப் பெறுவதற்கும் இது பேருதவியாக இருக்கும் என்றும் கூறினார்.

விசாகப்பட்டினத்தில் நாட்டின் முதலாவது செயற்கை நுண்ணறிவு மையம் தொடங்கப்படவிருப்பதை குறிப்பிட்ட பிரதமர், எதிர்காலத்தில் ஆந்திரப்பிரதேசம் நாட்டின் டிஜிட்டல் மையமாக உருவெடுக்கும் என்றும் தெரிவித்தார்.

<<<<>>>>>

உலகிலேயே விரைந்து வளர்ச்சிபெற்றுவரும் பொருளாதார நாடாக இந்தியா உருவெடுத்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

புதுதில்லியில் இந்தியா – பிரேஸில் வர்த்தக ஒத்துழைப்பு கூட்டத்தில் இன்று உரையாற்றிய அவர், நாட்டில் கடந்த பத்தாண்டுகளில் 25 கோடி பேர் வறுமையிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

பிரேஸில் குடியரசு துணைத்தலைவர் திரு. Geraldo Alckmin தலைமையிலான அந்நாட்டு வர்த்தக பிரதிநிதிகள் பங்கேற்ற இந்த வர்த்தக ஒத்துழைப்பு கூட்டம் மூலம், இருநாடுகளுக்கு இடையேயான உறவுகள் மேம்படும் என்று கூறினார்.

பல்வேறு நாடுகளுடன் இந்தியா தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளதை திரு. பியூஷ் கோயல் சுட்டிக்காட்டினார்.

<<<<>>>>>

ஆப்கானிஸ்தான் – பாகிஸ்தான் இடையே நிலவும் சூழ்நிலையை இந்தியா கூர்ந்த கவனித்து வருவதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால், பாகிஸ்தான் அரசு தீவிரவாத அமைப்புகளை ஊக்குவித்து, அவற்றுக்கு நிதி உதவி அளித்து வருவது தெளிவாக தெரிவதாகவும் கூறினார்.

அந்நாடு சந்திக்கும் தோல்விகளுக்கு அண்டை நாடுகளை குறை சொல்வது தொடர்கதையாகி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தீவிரவாதிகளை ஊக்குவிப்பதன் மூலம் ஆப்கானிஸ்தானின் எதிர்ப்பை பாகிஸ்தான் தூண்டி விடுவதாகவும் அவர் கூறினார்.

ஆப்கானிஸ்தான் சுதந்திர நாடாக முழுமையான இறையான்மையுடன் செயல்படுவதையே இந்தியா

விரும்புவதாகவும் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால் தெரிவித்தார்.

<<<<>>>>>

எரிசக்தி துறையில், ரஷ்யாவுடனான உறவுகள் இந்தியாவின் நலனுக்கு உகந்தது என்று இந்தியாவுக்கான ரஷ்ய தூதர் திரு Denis Alipov தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ரஷ்யாவின் கச்சா எண்ணெய் குறைந்த விலையில் இந்தியாவுக்கு கிடைப்பதை சுட்டிக்காட்டினார்.

ரஷ்யாவிலிருந்து கச்சா எண்ணெயை இறக்குமதி செய்யப் போவதில்லை என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளதை அடுத்து, திரு Denis Alipov-வின்அறிவிப்பு முக்கியத்துவம் பெறுகிறது.

<<<<>>>>>

உணவுப் பொருட்கள் அடைக்கப்பட்டுள்ள உறைகளின் மீது ORS என்று அச்சிடுவதை நீக்க வேண்டும் என்று இந்திய உணவு பாதுகாப்பு தர நிர்ணய ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள உத்தரவில், உணவுப் பொருட்கள் தயாரிப்பு நிறுவனங்கள் இதனை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும் என்றும், இதனை மாநில அரசுகள் உறுதி செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பாக்கெட்டுகளில் அச்சிடப்படும் முத்திரைகள் தொடர்பாக உணவுப்பொருட்கள் தர நிர்ணய ஆணைய சட்ட விதிமுறைகள் பின்பற்றப்படுவது கட்டாயம் என்றும் அதில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

<<<<>>>>>

ஆசியான் திரைப்பட விழா நாளை சென்னையில் தொடங்குகிறது.

சென்னையில் உள்ள மலேசிய துணைத் தூதரகத்தில் இரண்டு நாட்கள் நடைபெறும் இவ்விழாவில், ஆசியான் நாடுகளின் சிறப்பு திரைப்படங்கள் திரையிடப்படும் என்று தூதரக அதிகாரி திரு. சரவணக்குமார் தெரிவித்தார்.

வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் ஒத்துழைப்புடன் இந்த திரைப்பட விழா நடைபெறும் என்று அவர் கூறினார்.

ஆசியான் நாடுகளின் கலாச்சாரங்கள் தொடர்பாகவும், இந்தியாவுடன் ஆசியான் நாடுகளின் நட்புறவை பாராட்டும் வகையிலும் இந்த திரைப்பட விழா நடைபெறுவதாக மலேசிய துணைத் தூதரகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>>

சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பின் மூலம், பல்வேறு பொருட்களின் விலை கணிசமாக குறைந்துள்ளதால், அனைத்துத்தரப்பினரும் பயன் பெற்று வருகின்றனர்.

தமிழகத்தின் திருவண்ணாமலையை சேர்ந்த விவசாயிகள், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு வேளாண் உபகரணங்களுக்கான வரியை குறைத்திருப்பதால், தங்கள் வாழ்வாதாரம் உயர்ந்து வருவதாக தெரிவித்தனர்.

<<<<>>>>>

இந்திய கடற்படை கப்பல்களில் வீரர்கள் தங்குவதற்கான வசதிகளை மேம்படுத்துவதற்கு வகை செய்யும் புரிந்துணர்வு ஒப்பந்தம், தில்லியில் உள்ள இந்திய தொழில்நுட்ப கல்விக்கழகத்துடன் இன்று கையெழுத்தானது.

இதன்படி, கடற்படை கட்டமைப்பு இயக்குனரகத்துடன் இணைந்து கடற்படை வீரர்கள் பாதுகாப்பாக தங்குவதற்கான வசதியை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>>

ஆஸ்திரேலியாவில் வேலைவாய்ப்பு இல்லாதோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்நாட்டு தொழில்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த மாதம் வேலையில்லாதோரின் சதவீதம் 4 புள்ளி மூன்று சதவீதத்திலிருந்து, 4 புள்ளி ஐந்து சதவீதமாக உயர்ந்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

<<<<>>>>>

பாகிஸ்தானின் Khyber Pakhtunkhwa மாகாணத்தில் ஏற்பட்ட சாலை விபத்தில் 15 பேர் உயிரிழந்தனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இவர்கள் பயணித்த வாகனம். கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 8 பேர் காயமடைந்ததாகவும் அந்நாட்டு காவல்துறையினர் தெரிவித்தனர்.

<<<<>>>>>

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

உலக ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Tankara Gnana Dattu Talasila காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

குவஹாத்தியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 15-12, 15-13 என்ற செட் கணக்கில், அமெரிக்காவின் Garret Tan இணையை வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் தன்வி சர்மாவும், கலப்பு இரட்டையர் பிரிவில் Bhavya Chhabra – Vishakha Toppo இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

---------------

ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Tasnim Mir காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

---------------

Jinan ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Rutuja Bhosale – சீனாவின் Zheng Wushuang இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 5-7, 6-4, 10-6 என்ற செட் கணக்கில், சீன தைபே-யின் Cho I Hsuan – Yi Tsen Cho இணையை வென்றது.

----------

உலக இளையோர் செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Sriram Adarsh Uppala வெண்கலப்பதக்கம் வென்றார்.

அல்பேனியாவில் நடைபெற்ற இப்போட்டியின், ஆடவர் 18 வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

---------------

ஆசிய பாரா டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்தியா மூன்று வெண்கலப்பதக்கங்களை வென்றது.

சீனாவின் பெய்ஜிங்கில் நடைபெற்றுவரும் இப்போட்டியின், ஆடவர் ஒற்றையர் பிரிவில் Jehan Madan மற்றும் Sandeep Dangi-யும், மகளிர் ஒற்றையர் பிரிவில் Ekta Bhyan-னும் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

-----------------

ஐ சி சி-யின் கடந்த மாதத்திற்கான சிறந்த ஆட்டக்காரர் விருது இந்தியாவின் அபிஷேக் சர்மாவுக்கும், Smriti Mandhana-வுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

------------

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் போட்டித்தொடரில் பங்கேற்பதற்கான இந்திய அணி பெர்த் சென்றடைந்தது.

<<<<END>>>>>